**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, HANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/2022 | Village | : | **அண்டக்குடி** |
| Prosecution witness | : | PW -10 | Taluk | : | **பாபநாசம்** |
| Name | : | **மணிகண்டன்** | Occupation | : | **கலைதொழில்** |
| Father Name | : | **சுந்தரர்ராஜ்** | Age | : | 35 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 20.06.2025**

**All Accused present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் அண்டக்குடி, கீழத்தெரு பாபநாசம் தாலுக்காவில் வசித்து வருகிறேன். நான் தப்பாட்ட கலைஞராக வேலை பார்த்து வருகிறேன். 22.04.2022 அன்று நானும் கார்த்திகேயனும் கருப்பூர் பஸ்டாப் அருகே சுமார் மதியம் 3 மணியளவில் நின்றுகொண்டிருந்தபோது கபிஸ்தலம் போலிஸார் வந்தார்கள். ஆஜர் 2வது எதிரி போலிஸார் விசாரித்து கொண்டிருந்தார்கள். அவர் சொல்ல சொல்ல அதை போலிஸார் டைப் அடித்து கொண்டிருந்தார்கள். டைப் அடித்து முடிந்தவுடன் அதற்காக போலிஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது கையொப்பம் என்னுடையதுதான் அந்த கையொப்பம் **அ.த.சா.ஆ.6**. அதன் பின்பு நானும், கார்த்திகேயனும் போலிஸாரும், ஆஜர் 2வது எதிரியும் பட்டுகுடியில் அவர் வீட்டிற்கு போனோம். ஆஜர் 2ஆம் எதிரி முன்னே சென்றார், போலிஸாரிடம் ஆஜர் 2வது எதிரி இரத்த கரை படிந்த கைலியை எடுத்து கொடுத்தார். அந்த கைலிதான் என்னிடம் காட்டப்படுவது. அவ்வாறு அஜர் செய்த கைலியை போலிஸார் கைபற்றி கொண்டார்கள் அதற்காக ஆவணம் எழுதி கொண்டு சாட்சியாக என்னிடமும் கையெழுத்து வாங்கினார்கள். கைபற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கருப்பூர் பேருந்து நிறுத்தத்திற்கும், பட்டுகுடிக்கும் இடையே சுமார் 4, 5 கி.மீட்டர் தொலைவு இருக்கும். போலிஸார் தான் கணினியில் டைப் அடித்தார்கள். அவ்வாறு டைப்

செய்ததை போலிஸார் பிரிண்ட் அவுட் எடுத்து வந்தார்கள் எங்கு போய் எடுத்து வந்தார் என்று தெரியாது. அவர் எடுத்து வந்துவிட்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். ஆஜர் 2வது எதிரியின் வீடு மாடி வீடாகும். கைபற்றுதல் மகசர் யார் டைப் செய்தார்கள் என்றால் அது டைப் அடிக்கப்பட்டிருந்தது. போலிஸார் அதில் கையெழுத்து போடச்சொன்னதால் போட்டேன் என்றால் சரிதான். பட்டுகுடியில் என்னிடம் கையெழுத்து வாங்கிய ஆவணத்தில் 2ஆம் எதிரியும் கையெழுத்து போட்டார். நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல் எந்த விஷயமும் நடக்கவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையொப்பமிட்டுவிட்டு, அ.சா.1 எனக்கு வேண்டியவர் என்பதால் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- V.S.குமரேசன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.